www.padippakam.com



# யாழ்ப்பாண அரசில் நடந்த சிம்மாசன போட்டிகளும்-அதற்கான தலை வெட்டல்களும்

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

30

பூர்த்தாடு, புவிராச பண்டாரத்தின் தலையை வெட்டி நாற்சந்தியில் நிறுத்தி வைத்ததும், தமிழர் படை முழுவதும் அவனது படைகளிடம் சரணடைந்து விட்டன. புவிராச பண்டாரத்தின் மனைவிமார் இருவர், ஐந்து பிள்ளைகள், காகுவின் மனைவி, வேறு இரு அரசகுமாரிகள் உட்பட அரச குடும்பத்தைச் சேர்ந்த பலரும் பூர்த்தாடுவின் படைகளிடம் சிறைப்பட்டனர்.

பூர்த்தாடு ஊர் பிரமுகர்கள் சபையைக் கூட்டி, அவர்களுடன் கலந்தாலோசித்தபோது, அவர்கள் சண்டையின் போது போர்த்துக்கேயர் மன்னிப்பளித்துக் காப்பாற்றிய எதிர்மன்ன சிங்கனையே தங்களது அரசனாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதன்படி எதிர்மன்ன சிங்கனை 'பரராசசேகரன்' என்னும் பட்டத்துடன், தங்கள் அரசுக்குக் கீழ்ப்படிந்து, திறை செலுத்திக் கொண்டு ஆட்சி செய்யுமாறு பூர்த்தாடு கட்டளையிட்டான்.

ஏற்கனவே அவனால் கொல்லப்பட்ட புவிராச பண்டாரம் 'பரராசசேகரன்' என்ற பட்டத்தையே சூடியிருந்தபோதும் அவனை ஓர் அரசனாகத் தாங்கள் அங்கீகரிக்காத படியினால் மீண்டும் அந்தப் பட்டம் எதிர்மன்னசிங்கனுக்கு வழங்கப்பட்டது.

எதிர்மன்ன சிங்கனும், அவனது பிரதானிகளும், அதிகாரிகளும் போர்த்துக்கேயரின் மேலாண்மையை ஏற்று அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்தனர்

அதனை ஏற்றுக் கொண்ட பூர்த்தாடு அதன் பின்னர் தங்களது அரசுக்கு யாழ்பாணத்திலிருந்து எந்த அச்சுறுத்தலும் வரக் கூடாதென்பதற்காக சில முன்னேற் பாடுகளைச் செய்தான். அதாவது தங்களது அரசுக்கு எதிரானவர்கள் என்று கருதப்பட்ட 800 பேரை தலை வெட்டிக் கொன்றான். யாழ்ப்பாண அரசுக்குச் சொந்தமாக இருந்த பல கப்பல்கள் தோணிகள் வள்ளங்களில் இரண்டே இரண்டு வள்ளங்களை மட்டும் அரசனின் பாவனைக்கென விட்டுவிட்டு ஏனையவற்றை தீயிட்டு அழித்துவிட்டான். யாழ்ப்பாணக் கடலில் 100 போர்த்துக்கேய வீரர்களை மூன்று கப்பல்களிலும், 200 சிங்களப் படையினரை கஸ்பார் ரொத்திரிக்கேஸ் (Gaspar Rodrigaes) என்னும் சிங்கள முதலியின் தலைமையில் நல்லூர் அரண்மனைக்குள்ளும் காவலுக்கு நிறுத்தினான். இந்த ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்த பின்பு அவன் மன்னார் வழியாக கோவாவுக்குப் பயணமானான்

அவன் போன பின்பு தனது ஆட்சியதிகாரத்தை ஆரம்பித்த எதிர்மன்ன சிங்க பரராசசேகரன், தனது அரச குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேருக்கு அரச வம்சத்திற்குரிய 'மடப்பளிப்' பட்டமும், வேளாளர்களுக்குரிய முதலியார் பட்டமும் வழங்கி யாழ்ப்பாணத்திலுள்ள ஏழு இடங்களுக்கு அவர்களை அதிகாரிகளாக்கினான்.

இதில் அழகாண்மை வல்ல முதலியார் கல்வியங்காட்டுக்கும் திடவீரசிங்க முதலியார் அச்சுவேலிக்கும், தனபாலசிங்க முதலியார் மல்லாகத்திற்கும், வெற்றி வேலாயுத முதலியார் சண்டிலிப்பாய்க்கும், விஜய தெய்வேந்திர முதலியார் அராலிக்கும், சந்திரசேகர மாப்பாண முதலியார் உடுப்பிட்டிக்கும், இராஜரத்தின முதலியார் கச்சாய்க்கும் அதிகாரிகளாக்கப் பட்டனர்.

**கிறிஸ்த்தவ மதமாற்றம் தங்கு தடையின்றி– பலாத்காரமாகவே நடந்தது. கிறிஸ்த்தவ மதகுருமார்கள் – அரசனை விட அதிக அதிகாரம் படைத்தவர்களை போல நடந்து கொண்டார்கள். எதிர்மன் சிங்கனே போர்த்துக்கேயரின் தயவால் ஆட்சியைப் பெற்றவனாதலால் அவர்களுக்கு எதிராக அவனால் ஒன்றும் செய்ய முடியாது**

எதிர்மன்னசிங்க பரராசசேகரன் பெயருக்கு மட்டும் தான் அரசனாக இருந்தான். அதிகாரம் போர்த்துக்கேயர் கையிலேயே இருந்தது. போர்த்துக்கேய வீரர்கள் தங்களது இஷ்டப்படி மக்களின் உடமைகளை கொள்ளையடித்தும் சூறையாடியும் வந்தனர். அதைத் தட்டிக் கேட்டவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். கிறிஸ்த்தவ மத மாற்றம் தங்கு தடையின்றி- பலாத்காரமாகவே நடந்தது. கிறிஸ்த்தவ மதகுருமார்கள்- அரசனை விட அதிக அதிகாரம் படைத்தவர்களை போல நடந்து கொண்டார்கள். எதிர்மன் சிங்கனே போர்த்துக்கேயரின் தயவால் ஆட்சியைப் பெற்றவனாதலால் அவர்களுக்கு எதிராக அவனால் ஒன்றும் செய்ய முடியாது, அவர்களது கொடுமைகளை கண்டுங்காணாது இருந்தான்.

இதனால் அவன் மீது வெறுப்புற்ற மக்கள்- தங்களுக்கு வேண்டிய அதிகாரிகள் பிரதானிகளுடன் கலந்தாலோசித்து, அவனை சிம்மாசனத்திலிருந்து அகற்றிவிட்டு - இராமேஸ்வரத்திலிருந்த அரசகுமாரன் ஒருவனை தங்கள் அரசனாக்க முயன்றனர். இந்த முயற்சிக்கு கண்டி அரசனாகிய விமலதர்மசூரியனும், தஞ்சாவூர் அரசனும் உதவி செய்ய ஒத்துக் கொண்டனர்.

மன்னாரில் போர்த்துக்கேயத் தளபதி இந்த விடயத்தைக் கேள்விப்பட்டு மனுவல் து அத்தாயிட் (maneel de attaide) என்பனின் தலைமையில் ஒரு சிறுபடையை நல்லூருக்கு அனுப்பிவிட்டு, தஞ்சாவூரில் இருந்து வரும் படையை கடலில் வைத்தே எதிர்ப்பதற்காக பெரும் கடற்படை ஒன்றை தயார்ப்படுத்தினான்.

கி.பி 1592 நல்லூருக்குச் சென்ற அத்தாயிட் அங்கிருந்த குழப்பங்களை அறிந்து எதிர்மன்ன சிங்கனை நல்லூர் அரண்மனையை விட்டு வெளியேற்றி அப்போது போர்த்துக்கேய பிரமுகர்கள் வசித்த பறங்கித் தெருப் பகுதியில் மறைந்து வாழச்செய்தான். அதற்குள் தஞ்சாவூர் படை இராமேஸ்வரம் வழியாக தலைமன்னார் வந்து சேர்ந்த போது அதை எதிர்பார்த்துக் காத்திருந்த மன்னார்த் தளபதி, கடலில் வைத்தே அந்தப் படையை சிதறடித்து அதில் அநேகம் பேரைக் கைது செய்து கொண்டு யாழ்ப்பாணம் சென்றான்.

அவன் வருகிற செய்தி அறிந்தவுடனேயே அரசனுக்கு எதிராக கிளர்ச்சி செய்த யாழ்ப்பாண பிரமுகர்கள் தமிழ் நாட்டுக்கு தப்பி ஓடிவிட்டனர். கலகத்தில் ஈடுபட்ட மக்கள் மன்னார் கப்பித்தன் பெரும் களையெடுப்புச் செய்யப் போகிறான் என்ற அச்சத்தில் அடங்கிப் போய்விட்டனர். அதன்பின் எதிர்மன்ன சிங்கன் எதிர்ப்பின்றி பழையபடி நல்லூர் அரண்மனையில் குடியேறி ஆட்சி செய்தான்.

இவனது ஆட்சிக்காலத்திலேயே (கி.பி1591- 1616) கைலாய மாலை என்னும் நூல் எழுதப்பட்டதாக முதலியார் இராஜநாயகம் அபிப்பிராயப்படுகிறார். எதிர்மன்ன சிங்கன் போர்த்துக்கேயருக்கு மிகவும் வேண்டியவனாக இருந்தாலும் பண விடயத்தில் அவர்கள் அவனுக்கு மிகவும் தொல்லை கொடுத்தே வந்தனர். அவர்களுக்கு செலுத்த வேண்டிய திறைப்பணத்திற்காக அவன் யானைகளைக் கொடுத்த போதும் அவர்கள் மேலும் மேலும் யானைகள் வேண்டும் என்று கோரி அவனை நிர்ப்பந்தித்தனர்.

இதற்கிடையில் திருகோணமலை கடற்பரப்பு தொடர்பாக கண்டி அரசன் விமலதர்ம சூரியனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் பிணக்கேற்பட்டது. இதன் காரணமாக அவர்களுடன் மோதுவதற்கு தஞ்சாவூர் அரசனின் படை உதவியை கண்டி அரசன் கோரியிருந்தான். இந்தப்படையினர் தமிழ் நாட்டில் இருந்து யாத்திரிகர்கள் வேடத்தில் யாழ்ப்பாணத்திற்கு ஊடாகச் செல்கிறார்கள் என்றும், அவர்களை எதிர்மன்னசிங்கன் கண்டும் காணாமல் விடுகிறான் என்றும் போர்த்துக்கேயருக்கு தகவல் கிடைத்தது. போர்த்துக்கேயரின் மன்னார்த் தளபதி இது பற்றி எதிர்மன்ன சிங்கனிடம் வினாவினான். அவன் 'எனக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாது என்றும், இதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை' என்றும் அவர்களிடம் சொன்னான். அவர்கள் அதை நம்பத் தயாராக இல்லை.

இதனால் கோபமடைந்த எதிர்மன்ன சிங்கன் இனிமேல் எந்த யாத்திரிகர்களையும் தனது நாட்டுக்கு ஊடாக பிரயாணம் செய்வதற்கு அனுமதிப்பதில்லை எனத் தீர்மானித்து, தமிழ்நாட்டில் இருந்து சிவனொளிபாதமலைக்கும், கதிர்காமத்துக்கும் செல்லவென வந்த முன்னூறு பேரை தனது படைகளை அனுப்பிப்பிடித்து அவர்களது கைகளை பின்புறமாக கட்டியிழுத்துச் சென்று போர்த்துக்கேயர் முன்னால் நிறுத்தினான். அதுமட்டுமல்லாமல் அவர்கள் கண்முன்னாலேயே அந்த யாத்திரிகர்களை அப்போது காரைதீவு என அழைக்கப்பட்ட காரைநகரில் வைத்தே தோணியில் ஏற்றி தமிழ்நாட்டிற்கு திருப்பியும் அனுப்பினான்.

**தமிழ்நாட்டில் இருந்து சிவனொளிபாதமலைக்கும், கதிர்காமத்துக்கும் செல்லவென வந்த முன்னூறு பேரை தனது படைகளை அனுப்பிப்பிடித்து அவர்களது கைகளை பின்புறமாக கட்டியிழுத்துச் சென்று போர்த்துக்கேயர் முன்னால் நிறுத்தினான். அதுமட்டுமல்லாமல் அவர்கள் கண்முன்னாலேயே அந்த யாத்திரிகர்களை அப்போது காரைதீவு என அழைக்கப்பட்ட காரைநகரில் வைத்தே தோணியில் ஏற்றி தமிழ்நாட்டிற்கு திருப்பியும் அனுப்பினான்**

கி.பி. 1616ல் எதிர்மன்ன சிங்க பரராசசேகரன் திடீர் என நோய் வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயை எட்டினான். அப்போது தனது மைத்துனன் முறையான அரசகேசரி என்பவனை அழைத்து, தனது ஒரே மகனான மூன்று வயது இளவரசனை அவனிடம் ஒப்படைத்து அவன் பெரியவனாகி ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை அவனுக்கு பாதுகாவலனாக இருந்து அவன் சார்பில் ஆட்சியை நடத்தி வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். கோவாவில் இருந்த போர்த்துக்கேய தேசாதிபதியிடம் அதற்கு வேண்டிய சம்மதத்தைப் பெறுவதற்காக தூதுவன் ஒருவனையும் அனுப்பினான். அந்த தூதுவன கோவாவில் இருந்து திரும்பி வருவதற்கு முன்பே அவன் இறந்து விட்டான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சங்கிலிகுமாரன் என்ற அரச குமாரன் அரசகேசரியின் பதவியை தான் அடைய விரும்பினான். அதற்கான சதிவேலையை மேற்கொள்வதற்கு அரண்மனைக்கு உள்ளும் புறமும் ஆட்களைத் தயார்ப்படுத்தினான். ஒரு நாள் நண்பகலில் பெரிய மீகாப்பிள்ளை என்னும் மெய்க்காப்பாளன், கால் வருடப் படுத்திருந்த அரசகேசரியை அரண்மனைக்குள்ளிருந்த கையாட்கள் கதவைத் திறந்து விட சங்கிலி குமாரனும் அவனது ஆட்களும் உள்ளே நுழைந்து வெட்டிக் கொன்று விட்டு அரண்மனையையும் கைப்பற்றினார்கள். இதன் போது ஏற்பட்ட சண்டையில் சங்கிலிகுமாரனின் மைத்துனனும் போர்த்துக்கேயர் தலைவெட்டிக் கொன்ற புவிராசபண்டாரத்தின் மகனான லியூக்குமாரனைத் தவிர அரண்மனையில் இருந்த மற்ற இளவரசர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

– நக்கீரன்